செ.வெ.எண்.53 நாள் 18.01.2011

# செய்தி வெளியீடு – 18.1.2011

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் உலகத் தரம்வாய்ந்த ரூபாய் 1000 கோடி முதலீட்டிலான அதிநவீன புதிய காகித இயந்திரம்!

## காணொலிக்காட்சி வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்து ரூபாய் 377 கோடி மதிப்பீட்டிலான மூன்று திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்!

தமிழகத்தில் கரூர் மாவட்டம், புகளூரில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கடந்த 26 ஆண்டுகாலமாக காகித உற்பத்தியில் படிப்படியாக வளர்ச்சிபெற்று மகத்தான பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் முதலில் ஆண்டுக்கு 90 ஆயிரம் மெட்ரிக்டன் காகித உற்பத்தித் திறன்கொண்ட இயந்திரத்துடன் செயல்படத் தொடங்கியது. பின்னர் இரண்டாம் கட்டமாக மேலும் 90 ஆயிரம் மெட்ரிக்டன் காகித உற்பத்தி செய்திடும் திறன்கொண்ட இரண்டாவது இயந்திரம் நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டு காகித உற்பத்தி இயந்திரங்களையும் நவீனமயமாக்கியதன் பயனாக, அந்த இரண்டு காகித உற்பத்தி இயந்திரங்கள் மூலமாக காகித உற்பத்தித் திறன் மொத்தம் ஆண்டுக்கு 2 இலட்சத்து 45 ஆயிரம் மெட்ரிக்டன் என உயர்ந்தது.

தற்போது ஆண்டுக்கு மேலும் 1 இலட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக்டன் காகிதத்தை உற்பத்தி செய்யக்கூடிய உலகத்தரம்வாய்ந்த மூன்றாவது அதிநவீன காகித இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

ஜெர்மன் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த இயந்திரம் 191 மீட்டர் நீளம் உடையது; இது ஒரு நிமிடத்தில் 5.45 மீட்டர் அகலமுள்ள 1100 மீட்டர் நீள காகிதத்தை; அதாவது நாளொன்றுக்கு 573 மெட்ரிக்டன் வீதம் ஆண்டுக்கு 1

இலட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக்டன் காகிதத்தை உற்பத்தி செய்யும் அதிநவீன திறனுடையது.

மொத்தம் 1000 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவுபடுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு செய்தித் தாள் காகித உற்பத்தி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள மூன்றாவது இயந்திரத்தின் காகித உற்பத்தியை நாளை (19.1.2011) காலையில், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைக்கிறார்.

மேலும், 67 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 600 டன் உற்பத்தித் திறன் கொண்ட திடக்கழிவிலிருந்து சிமெண்ட் தயாரிக்கும் ஆலை, 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீராவி மற்றும் மின் உற்பத்திப் பிரிவை நவீனப்படுத்துதல், 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 300 டன் உற்பத்தித் திறன் கொண்ட காகிதத்திலிருந்து மை நீக்கிய காகிதக்கூழ் தயாரிக்கும் ஆலை, ஆகிய மூன்று திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் கலைஞர் அடிக்கல் நாட்டுகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் காகித ஆலைப் பகுதியிலுள்ள நெடுஞ்சாலை ஓரங்களில் 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தைத் தொடங்கிவைப்பதுடன் காகித ஆலை மேற்கொள்ளும் சமூக நலப் பணிகளுக்கான நிதியுதவிகளையும் வழங்குகிறார்.

***

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9